புரட்சிப்

# பெரியார் முழக்கம்



www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • பிப்ரவரி(February), 26,2026 • புரட்சி 26 • முழக்கம்(ISSUE) 8 • விலை(PRICE) ரூ.6.00

### ஊடகவியலாளர்களிடம் முதல்வர் கேள்வி

# தமிழ்நாட்டைப் போல் சாதனைகள் வேறு எந்த மாநிலத்திலாவது உண்டா?



**• வளர்ச்சி அரசியலுக்கு அடையாளம் தமிழ்நாடு**

**• என்.டி.ஏ வாஷிங்மெஷின் கூட்டணி**

இங்கு ஏராளமான ஊடகவியலாளர்கள் இருக்கிறீர்கள். 11.19 சதவிகிதம் வளர்ச்சி என்பதை, தமிழ்நாட்டைத் தவிர வேறு எந்த மாநிலத்தால் சாதிக்க முடிந்திருக்கிறது?அதுவும் எப்படிப்பட்ட சூழலில் இதை சாதித்திருக்கிறோம்? ஜனநாயகத்திற்கும், கூட்டாட்சிக்கும்சிறிதும் மதிப்பு தராத பா.ஜ.க. ஆட்சி ஒன்றியத்தில் ஆளுகிறது. எதிர்க்கட்சிகள் ஆளக்கூடிய மாநிலங்களை, எந்தளவிற்கு வஞ்சகத்துடன், ஓரவஞ்சனையுடன் அவர்கள் *Approach* செய்கிறார்கள் என்று நான் உங்களுக்கு விளக்கி சொல்ல வேண்டிய அவசியம் இல்லை, உங்களுக்கே அது நன்றாகத் தெரியும்.

ஆளுநர்கள் மூலமாக நிர்வாகச் சிக்கல்களை ஏற்படுத்துவதில் தொடங்கி, செயற்கையான நிதிச் சுமையை உருவாக்கி மாநிலங்களை முடக்க நினைப்பது வரைக்கும், அத்தனை செயல்களையும் செய்து கொண்டிருக்கிறார்கள். இது மட்டும்தான் அவர்களுக்குத் தெரிந்த *Politics.*

ஆனால், இதையெல்லாம் அரசியல் தளத்திலும், ஆட்சி அதிகாரத்திலும் எதிர்கொண்டு, “வளர்ச்சி அரசியல் என்றால், தமிழ்நாட்டைப் பாருங்கள்” என்று சொல்லும் அளவிற்கு *Development Politics*-க்கானஅடையாளமாக தமிழ்நாடு வளர்ந்திருக்கிறது. அதுவும் ஒரு தரப்புக்கான வளர்ச்சி இல்லை; ‘எல்லாருக்கும் எல்லாம்’ என்ற பரந்துபட்ட வளர்ச்சி! பெண்கள், மாணவர்கள், இளைஞர்கள், உழவர்கள், தொழிலாளர்கள், நெசவாளர்கள், தொழில் முனைவோர், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், திருநர்கள், மாற்றுத்திறனாளிகள் என்று எல்லோரையும் ‘*Empower*’ செய்யும் *Politics*-யை நாங்கள் முன்னெடுத்து இருக்கிறோம்.

நாங்கள் செய்திருப்பது மாதிரியான திட்டங்களை வேறு எந்த மாநிலத்திலாவது செய்து இருக்கிறார்களா? ‘*Growth*’ சாதாரணமாக வந்துவிடுமா? இத்தனை திட்டங்களையும் வெற்றிகரமாக செயல்படுத்துவதால்தான் 11.19 சதவிகிதம் ‘*Growth*’ சாத்தியமாகியிருக்கிறது!

தமிழ்நாட்டில் எந்தக் குடும்பத்தை எடுத்துக்கொண்டாலும், அவர்களில் ஒருவராவது நம்முடைய அரசின் திட்டங்களால் பயனடைந்து கொண்டிருப்பார்கள்! அதனால்தான், ஆட்சிக்கு ஆதரவான மனநிலையில் மக்களை இன்றைக்கு நாங்கள் சந்திக்கிறோம்! தமிழ்நாட்டின் இந்த வளர்ச்சியும், தனித்துவமும், உண்மையான வளர்ச்சி அரசியல் என்றால் என்ன என்று இந்தியாவின் மற்ற மாநிலங்களுக்கு காண்பிக்கும் செயல்பாடுகளும் பா.ஜ.க.வை கடுமையாக எரிச்சல் அடைய வைக்கிறது. ஆனால், அவர்களின் சதி அரசியல் *Expose* ஆகி, அவமானப்பட்டு, அசிங்கப்பட்டு நிற்கிறார்கள்.

பா.ஜ.க.வின் ‘*Pattern*’ என்ன என்று தி.மு.க. மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழ்நாடே உணர்ந்திருக்கிறது. அவர்கள் மேல் மக்களுக்கு நம்பகத்தன்மை கிடையாது. மற்ற மாநிலங்களில் கட்சிகளை மிரட்டி, ஆட்சிகளைக் கவிழ்த்து, தங்களின் அரசைக் கொண்டு வரப் பயன்படுத்திக் கொண்ட‘வாஷிங் மெஷினை’, கொண்டு வந்து கூட்டணி அமைத்திருக்கிறார்கள். அவர்களின் *N.D.A.* கூட்டணி என்பது முழுக்க முழுக்க ஊழல்வாதிகளை மிரட்டி அமைக்கப்பட்டுள்ள கூட்டணிதான்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் இருந்த முன்னாள் அமைச்சர்கள் பல பேர் ரெய்டுகளுக்கு ஆளானவர்கள். 10 பேர் மேல் *D.V&A.C*-யில் வழக்குகள் இருக்கிறது. ஆனால், கூட்டணிக்காக அவர்களை இப்போது பாதுகாத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்ல வேண்டும் என்றால், முன்னாள் அமைச்சர்கள் சில பேர் மேல் *F.I.R.* கூட பதிவு செய்ய விடாமல் நிறைய ஆண்டுகளாக ஆளுநர் மூலமாக நிறுத்தி வைத்திருக்கிறார்கள்.

இந்த இலட்சணத்தில், இப்போது *E.D., I.T., C.B.I.* ஆகியவற்றை வைத்து எங்களையும் மிரட்டலாமா என்று பார்க்கிறார்கள். என்னதான் பா.ஜ.க. *E.D., I.T., C.B.I.* என்று தன்னுடைய படைப் பரிவாரத்தை அழைத்து வந்தாலும், அதை ஒரு கை பார்க்க நாங்களும் தயாராகத் தான் இருக்கிறோம்.

*E.D.* இதுவரைக்கும் பதிவு செய்த 8000-க்கும் அதிகமான வழக்குகளில் எத்தனை வழக்குகள் முழுமையாக நடைபெற்றிருக்கிறது? அவர்களின் உண்மையான ‘*Conviction rate*’ என்ன? ஊழல் குற்றச்சாட்டிற்கு உள்ளானவர்கள் எல்லோரும் உடனடியாக யாருடன் கூட்டணி சேருகிறார்கள்? புலனாய்வு முகமைகளை இவ்வளவு மலிவாக பயன்படுத்திதான் பா.ஜ.க. அரசியல் சதுரங்க வேட்டை நடத்திக் கொண்டிருக்கிறது. அதற்கு *N.D.A.* கூட்டணி என்று பெயர்.

மக்கள் பா.ஜ.க.வை நம்ப வேண்டும் என்று, பழனிசாமி போன்ற ஆமாம் சாமியை பா.ஜ.க.வின் கிளைக் கழகச் செயலாளராக வைத்துக் கொண்டு ‘டப்பா எஞ்சின்’ எடுத்துக் கொண்டு உள்ளே வர நினைக்கிறார்கள்.

### பாஜக நுழைந்தால்

பா.ஜ.க. உள்ளே நுழைந்தால், எப்படி யெல்லாம் நடந்துகொள்வார்கள் என்பதைதான் இப்போது அண்மையில் மகாராஷ்டிராவில் பார்த்துக் கொண்டிருக்கிறோம். மாநிலக் கட்சியை உடைத்து ஆட்சிக்கு வந்த அவர்கள், இப்போது பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்களுக்கான 5 விழுக்காடு இடஒதுக்கீட்டை இரத்து செய்திருக்கிறார்கள்.

“மகளிர் உதவித்தொகை திட்டத்தில் 28 இலட்சம் பெண்களை நீக்கியிருக்கிறார்கள். இதைத் தான் தமிழ்நாட்டிலும் செய்ய நினைக்கிறார்கள். அதற்கு அவர்கள் பயன்படுத்திக்கொள்ள நினைக்கும் ‘ட்ரோஜன் குதிரை’ தான் அ.தி.மு.க. அதனால்தான் பழனிசாமி அவர்கள் வழங்கும் எந்த வாக்குறுதியையும் மக்கள் நம்பத் தயாராக இல்லை. மண்குதிரையை நம்பி யாராவது ஆற்றில் இறங்குவார்களா? நிச்சயம் மாட்டார்கள்!

எங்களைப் பொறுத்தவரைக்கும் எங்களின் இலட்சிங்களும் கடமைகளும் மிகவும் பெரியது. அதை நோக்கிய பயணம்தான் எங்களுடைய தேர்தல் வெற்றிகள். “எல்லாருக்கும் எல்லாம்”, “எங்கும் தமிழ் - எதிலும் தமிழ்”, “அனைத்துத் துறை வளர்ச்சி - அனைத்து மாவட்ட வளர்ச்சி” என்று மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

அடுத்து, ஒன்றுபட்ட இந்தியாவில், மாநிலங்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தந்து, உண்மையான கூட்டாட்சிக் கருத்தியலை நிறுவ வேண்டும் என்று எங்களின் அடுத்த கட்டப் பயணத்தையும் தொடங்கியிருக்கிறோம்”.

---

● குஜராத் பாஜக ஆட்சி சட்டத் திருத்தம் ஒன்றைக் கொண்டு வந்துள்ளது. இதன்படி பெற்றோர்கள் ஒப்புதல் இல்லாத திருமணங்கள் செல்லாது. திருமணப் பதிவின்போது பெற்றோர்கள் ஒப்புதல் தந்தால் மட்டுமே திருமணம் பதிவாகும்.

● ஆப்கானிஸ்தானில் 2021 முதல் தாலிபான்கள் ஆட்சி நடத்தி வருகிறார்கள் குடும்பத்தில் ஆண்கள் தங்கள் மனைவியை, குழந்தைகளை அடிக்கலாம் என்று சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால் எலும்பு முறியும் அளவுக்கு அடிக்கக் கூடாது என்று பெண்களுக்கு “பாதுகாப்பு” வழங்கப்பட்டுள்ளது.

● வடகொரியாவில் 400கி.மீ இலக்கு வைத்து தாக்கக்கூடிய ராக்கெட்டுகள், அணு ஆயுதங்கள், செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த அணிவகுப்பை தலைநகர் பியாங்யாங்கில் பார்வையிட்ட அதிபர் கிம்ஜொங் இவ்வாறு கூறினார்: “இவற்றை நாங்கள் பயன்படுத்தினால் எதிரிகளை கடவுள்களாலும் காப்பாற்ற முடியாது. வட கொரிய ‘கடவுளையும்’ வீழ்த்தும் போர்க் கருவியைக் கண்டுபிடித்துவிட்டது”.

● நீதிபதி குரியன் ஜோசப் தலைமையில் தமிழ்நாடு அரசு நியமித்த மாநில சுயாட்சிக்கான குழுவின் அறிக்கையை சட்டமன்றத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் சமர்ப்பித்தார். அதில் குடியரசுத்தலைவரால் நியமிக்கப்படும் ஆளுநர்கள் மாநில சட்டமன்றத்தின் மொத்த உறுப்பினர்களின் பெரும்பான்மையினரால் ஏற்றுக் கொள்ளப்படவேண்டும். குடியரசுத் தலைவர் மூன்று பெயர்களை பரிந்துரைக்கலாம். இதற்கேற்ப சட்டத் திருத்தம் செய்ய வேண்டும்

---

### சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு

## மயானத்தில் பாகுபாடு காட்டுவது தீண்டாமையே!

பொது மயானத்தை ஒடுக்கப்பட்ட சமூகத்தினர் பயன்படுத்த அனுமதி மறுப்பது தீண்டாமைக்குச் சமமான குற்றம் என்று குறிப்பிட்ட நீதிபதி வி.லட்சுமி நாராயணா, ஈரோடு மாவட்டத்தில் மயான நிலத்தை ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாக்கவும், கல்லறைகளைச் சேதப்படுத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் மாவட்ட நிர்வாகத்திற்கு உத்தரவிட்டுள்ளார்.

“வாழும் போது கண்ணியத்துடன் வாழ உரிமை உள்ளது போல, இறந்த பிறகு கண்ணியமான இறுதிச் சடங்குகளைப் பெறுவதும் அடிப்படை உரிமையே” என்று சென்னை உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. பொது மயானத்தை ஒடுக்கப்பட்ட சமூகத்தினர் பயன்படுத்த அனுமதி மறுப்பது, தீண்டாமைக்கு சமமே என சென்னை உயர் நீதிமன்றம் வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளது.

ஈரோடு மாவட்டம், கருமாண்டி செல்லிப்பாளையம் கிராமத்தில் உள்ள வண்டிப்பாதை நிலத்தை மயானமாக மாற்றக் கோரியும் மயானம் என்று வரையறை செய்யப்பட்ட இடத்தில் அடக்கம் செய்ய உறுதி கோரியும் கிராமத்தினர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

இந்த வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிபதி வி.லட்சுமி நாராயணா முன்பு வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி, கருமாண்டி செல்லிப் பாளையம் கிராமத்தில் உள்ள சர்ச்சைக்குரிய நிலம் வண்டிப்பாதை புறம்போக்கு நிலம் என்று வகைப்படுத்தப்பட்டபோதும் இந்த நிலத்தை 70 ஆண்டுகளாக மயானமாக பயன்படுத்தி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அருந்ததியர் சமூகத்தினர் இந்த இடத்தை இறந்தவர்களின் உடலை அடக்கம் செய்ய பயன்படுத்தி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களை பொதுவாக உள்ள மயானம் அல்லது தகனம் செய்ய இடத்திற்குச் செல்ல அனுமதி மறுக்கப்படுவது குற்றம், இது தீண்டாமையின் ஒரு வடிவம் என்று தெரிவித்துள்ளார். சம்பந்தப்பட்ட இடத்திலுள்ள நிலம் ஆக்கிரமிப்பு மற்றும் குப்பை கொட்டும் பகுதியாக மாறாமல் இருக்க கருமாண்டி செல்லிப்பாளையம் பேரூராட்சிக்கும் மாவட்ட ஆட்சியருக்கு உத்தரவிட்டுள்ளார். குறிப்பாக, மயானத்தில் உள்ள கல்லறைகளைப் சேதப்படுத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க நீதிபதி உத்தரவிட்டார்.

# டெல்லி ஆதிக்கத்தை தமிழ்நாடு முறியடிக்கும்!

திமுக கூட்டணியில் காங்கிரஸ் சலசலப்புகளால் மகிழ்ச்சிக்கூத்தாடியவர்கள் இன்று சோகத்தில் மூழ்கிக் கிடக்கிறார்கள். தேமுதிக அணி திமுக கூட்டணியில் சேர்ந்து விட்டது. இதற்கு அக்கட்சியின் தலைவர் பிரேமலதா கூறிய காரணம் மிகவும் முக்கியமானது:

தொண்டர்களின் விருப்பத்தின் காரணமாகவே இந்த கூட்டணியில் இணைந்திருக்கிறோம் என்று அவர் கூறியிருக்கிறார்; தொண்டர்களின் மனநிலை இயல்பாகவே திமுக அணிக்கு ஆதரவாகவும் அதுவே வெற்றி பெறும் அணி என்ற உறுதியான நம்பிக்கையாலும் உருவாகிறது.

ஆட்சியில் இருக்கும் கட்சியின் மீது அதிருப்திகள் உருவாவது இயல்புதான் என்ற பொதுவான கருத்தை திராவிட மாடல் ஆட்சி தன்னுடைய சாதனைகளால் தகர்த்து இருக்கிறது; அதன் காரணமாகத்தான் இதுவரை கூட்டணியில் இடம் பெறாத தேமுதிக, திமுக அணியில் வந்து சேர்ந்திருக்கிறது.

இதுவரை தமிழ்நாட்டுத் தேர்தல் களத்தில் அறியப்பட்ட அதிமுக கூட்டணி இப்போது பெயர் மாற்றம் பெற்று என்.டி.ஏ.கூட்டணி ஆகிவிட்டது. எடப்பாடி தான் முதல்வர் என்ற ஒற்றைப் புள்ளியில் மட்டும் அதன் அடையாளம் தெரிகிறது. தினகரனையும் அன்பு மணியையும் பாஜக தான் தனது அதிகார வலிமையினால் கூட்டணியில் கொண்டு வந்து சேர்த்திருக்கிறது. அதே நேரத்தில் எடப்பாடி பழனிச்சாமியால் கூட்டணிக்கு கொண்டுவரப்பட்ட தேமுதிக இப்போது விலகி விட்டது. ஆட்சியில் பங்கு உண்டு என்று அறிவித்து தேர்தல் களத்தில் கதவைத் திறந்து வைத்திருக்கும். த.வெ.க வை நோக்கி இதுவரை எந்த கட்சியும் நகரவில்லை;

கூடுதல் இடங்களுக்கு பேரம் பேசுவதற்கு மட்டுமே இந்த கட்சியை பயன்படுத்திக் கொள்கிறார்கள். இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்கும் சுயாட்சி உரிமை வேண்டும் என்ற பிரகடனத்தை சட்டமன்றத் தீர்மானமாக நிறைவேற்றி தேர்தல் களத்தை சந்திக்கிறார் தமிழ்நாடு முதல்வர் மு க ஸ்டாலின் தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல; இந்தியாவின் கூட்டணிக்கே இவரே பொருத்தமான தலைவர் என்ற குரல் இயல்பாகவே கேட்கத் துவங்கியிருக்கிறது.

திமுக கூட்டணியின் தலைவர் என்ற எல்லை கடந்து இந்திய கூட்டணியின் தலைவராக கம்பீரமாக நிமிர்ந்து நிற்கிறார் தமிழ்நாடு முதல்வர். டெல்லி ஆதிக்க எதிர்ப்புக் கொடியை கரங்களில் ஏந்தி மக்கள் தீர்ப்பைக்கோரி நிற்கிறார்.

எதிர் அணிகளோ தமிழ்நாட்டு மக்களுக்கு ஒன்றிய அரசு இழைக்கும் துரோகங்களை எதிர்க்காமல் நடுங்கி வாய்மூடிக் கிடக்கின்றன. தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியை எடப்பாடி பழனிச்சாமியால் மறுக்க முடியவில்லை; அந்த வளர்ச்சியில் தங்களுக்கும் பங்கு உண்டு என்று உரிமை கோரும் நிலைக்கு வந்துவிட்டார்.

கொசுக்கடி;சாலை விபத்து; காவல் நிலைய பிரச்சனைகள்; என்று அன்றாட நிகழ்வுகளை வைத்தே திமுக அணியை எதிர்க்கும் அவல நிலையில் எதிர்க்கட்சிகள் நிற்கின்றன. ஆட்சியின் மகத்தான சாதனைகள் இவர்களை மவுனமாக்கி விட்டன. எண்ணிக்கைகளை விட இறையாண்மைக்கு போராடும் சட்டமன்றத் தேர்தலை தமிழ்நாட்டின் வரலாற்றில் முதன் முதலாக சந்திக்கப் போகிறோம். அதற்கு களத்தை தயார் செய்கிறார் தமிழ்நாடு முதல்வர் மு.க ஸ்டாலின். திராவிடம் வென்று காட்டும்!

## முடிவெய்தினார் தோழர் நல்லகண்ணு

தோழர் நல்லகண்ணு விடைப்பெற்றுக் கொண்டார். அவர் தமிழ்நாட்டின் அடையாளம். தகைசால் தமிழர் என்ற விருதுக்கு அவர் பொருத்தமானவர். அவருடைய வாழ்க்கை பல பாடங்களை விட்டுச் சென்று இருக்கிறது.
ஒரு தலைமை உறுதியான, எளிமையான, நேர்மையான வாழ்க்கையை வாழ்ந்து காட்ட முடியும். அதுவும் நூறாண்டுகள் கடந்தும் வாழ முடியும் என்ற செய்தியை தமிழ்நாட்டு பொது வாழ்க்கைக்கு விட்டு சென்று இருக்கிறார்.

பொது வாழ்க்கை என்றாலே கறை படிந்த வாழ்க்கை என்று ஆகிவிட்ட ஒரு சமூகத்தில் நேர்மையான ஒரு வாழ்க்கையை இலட்சியவாதி வாழ்ந்து காட்ட முடியும் என்பதை அவர் நிருபித்து காட்டியிருக்கிறார். பொதுவாக பெரியாரிய, மார்க்சிய இலட்சியத்தை ஏற்றுக் கொண்டிருக்கிற தலைவர்களின் ஆயுளும் நீண்டு இருக்கிறது. அவர்கள் வாழ்ந்து காட்டிய வாழ்க்கையும் சமூகத்திற்கு பாடமாக இருக்கிறது.

தமிழ்நாடு அரசு அவருக்கு அரசு மரியாதையுடன் வழி அனுப்பி வைப்பது மிகச்சிறந்த முடிவு. தமிழர்களின் உணர்வுகளை பிரதிபலிக்கக்கூடிய ஒரு முடிவு.

தீண்டாமை கொடுமைகளுக்கு எதிராக அவர் முக்கிய கவனம் செலுத்தி அந்தப் போராட்டங்களில் பங்காற்றி இருக்கிறார். அவருடைய இறுதி காலத்தில் சொல்லப்போனால் இரண்டு பிரச்சனைகளில் அவர் முக்கிய கவனம் செலுத்தினார். ஒன்று சுற்றுச்சூழல் பிரச்சனை; மற்றொன்று ஜாதி தீண்டாமைக்கு எதிரான பிரச்சனை. பொதுவுடமை இயக்கம் ஜாதி தீண்டாமைக்கு எதிரான இயக்கம் என்பதை தன்னுடைய செயல்பாடுகள் மூலம் நிரூபித்து காட்டிய பெருமை அவருக்கு உண்டு.

அதேபோல் இந்த மணல் கொள்ளை, சுற்றுச்சூழல் கொள்ளை இவைகளுக்கு எதிராக அவர் நீதிமன்றத்திலேயே வழக்கு தொடர்ந்தார். நீதிமன்றத்திலே நேரில் ஆஜராகி அவர் வாதிட்டார். எனவே சுற்றுச்சூழல் பிரச்சனையும், ஜாதி தீண்டாமைக்கு எதிரான பிரச்சனையும் பொதுவுடைமை இயக்கங்கள் தங்களுக்குள் வரித்துக் கொள்ள வேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டு செயல்பட்ட பெருமை நல்லகண்ணு அவர்களுக்கு உண்டு. தோழருக்கு திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் வீரவணக்கம்!

விடுதலை இராசேந்திரன், 25.02.2026
(சன்நியூஸ் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி)

# டெல்லி ஏ.அய் மாநாட்டில் தலைகுனிவு!

டெல்லியில் நடைபெறும் ஏ.அய் (AI) மாநாட்டில் ஏற்பட்ட பல குழப்பங்கள் உலக அரங்கில், இந்தியாவுக்குத் தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது. ஐந்து நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டின் ஏற்பாடுகளில் சரியான திட்டமிடல் இல்லாமல், சர்வதேச அழைப்பாளர்கள் அலைச்சலைச் சந்தித்தனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. உணவு, குடிநீர் பற்றாக்குறை, பொருட்கள் திருட்டு ஆகியவற்றால் பார்வையாளர்கள் சிரமங்களைச் சந்தித்துள்ளனர்.

அதைவிடவும் முக்கியமாக, உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த கல்கோட்டியாஸ் பல்கலைக்கழகம் (Galgotias University), சீன நிறுவனத்தின் ரோபோ நாய் (Orion) இயந்திரத்தைத் தங்களது தயாரிப்பு என விளம்பரப்படுத்தி, விமர்சனத்தைச் சந்தித்துள்ளது. இந்தத் தகவல்கள் வெளியாகி சீன ஊடகங்களால் கேலிக்கு ஆளாகியுள்ளது இந்த ஏ.ஐ (AI) மாநாடு. இந்த உண்மை தெரிந்ததும் அந்தப் பல்கலைக்கழகம் அமைத்திருந்த அரங்கை, அதிகாரிகள் மூடியுள்ளனர். அதிலும் குறிப்பாக இந்தியாவின் தொழில்நுட்ப வளர்ச்சி, இந்திய கல்வி நிறுவனங்களின் பெருமை என இந்த ரோபோவின் வீடியோவைத் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தனது எக்ஸ் தளத்தில் பகிர்ந்திருந்ததுடன், சர்ச்சை உருவானதும் அதை நீக்கியுள்ளார்.

தொழில்நுட்ப தேசியவாதம் என்ற பெயரில், வெளிநாட்டுத் தயாரிப்பை ’இந்திய சாதனை’ என மேடையில் காட்டும் மனநிலை, அறிவியல் வளர்ச்சிக்கு ஆபத்தானது, வெட்கக்கேடானது என எதிர்க்கட்சிகள் விமர்சனம் செய்துவருகின்றன. தொழில்நுட்ப வளர்ச்சியை விளம்பரமாக அல்ல, அடிப்படை முதலீடாகக் கருதி ஊக்குவிக்க வேண்டும். போலி தேசியவாதத்தின் மூலம் மக்களை ஏமாற்ற முடியும் என நினைத்தவர்களுக்கு டெல்லி ஏ.ஐ (AI) மாநாடு பாடம் கற்பித்துள்ளது.

# திட்டங்களை மலினப்படுத்தும் எடப்பாடி!

எடப்பாடி பழனிச்சாமி உலக வங்கியை தமிழ்நாட்டிற்கு அழைத்து வந்து விட்டார் போலிருக்கிறது. ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களில் சலுகையை அள்ளிவிட்டு இருக்கிறார்.

தமிழ்நாடு முதல்வர் மகளிர் உரிமைத் தொகை தடைபடாமல் கிடைப்பதற்கு ரூ.5000 ரூபாயை வழங்கியதற்கு பிறகு இவர்கள் தூக்கமின்றி தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதன் எதிரொலி தான் இன்றைய அறிவிப்புகள்.

ரூ.10,000 அறிவித்து விட்டால் பிகார் மாடலில் வெற்றி பெறலாம் என்று கற்பனையில் மிதக்கிறார்கள்.கடந்த தேர்தலில் மாதம் பெண்களுக்கு திமுக-வைவிட கூடுதலாக ரூ.500 சேர்த்து 1,500 ரூபாய் வழங்குவதாக இவர் அறிவித்த பிறகும் மக்கள் எடப்பாடியை நம்பத் தயாராக இல்லை. தமிழ்நாடு அரசு கடனில் மூழ்கி கிடக்கிறது என்று நேற்று வரை பேசியவர். ஆட்சிக்கு வந்தவுடன் எப்படி இந்த அறிவிப்புகளை அமல்படுத்தப் போகிறார் என்ற கேள்விக்கு அவரிடம் பதில் இல்லை.

இதுவரை அவர் வெளியிட்ட சுமார் 16 அறிவிப்புகள் அனைத்தும் நிதி சார்ந்தது தான். அக்கட்சியின் தேர்தல் தயாரிப்புக் குழுவும் அவர்தான். இரண்டு நாட்களுக்கு முன் ஒன்றிய நிதி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பேசும்போது தமிழ்நாடு மும்மொழி கல்வித் திட்டத்தை ஏற்காததால். ரூ.5000 கோடி இழந்துவிட்டது என்று குறிப்பிட்டிருந்தார்.

எடப்பாடி அறிவிப்போடு இதையும் இணைத்துப் பார்க்க வேண்டும். இரட்டை எஞ்சின் ஆட்சிக்கு பச்சைக்கொடி காட்டியதால் இந்த அறிவிப்பு வெளிவந்திருக்கிறது. பெண்களை அதிகாரப்படுத்துதல் என்ற தொலைநோக்கு திட்டத்தை திமுக அறிவித்து அதற்கு பத்தாண்டு காலம் இலக்கு நிர்ணயித்து அதன் அடிப்படையில் அறிவிக்கப்பட்டது தான் மகளிர் உரிமைத்தொகை.

இதை ஓட்டுக்கு பணம் கொடுக்கும் திட்டமாக மலினப்படுத்துகிறார். எடப்பாடியின். வெற்று வாக்குறுதிகளை மக்கள் நம்ப மாட்டார்கள். "யார் கிட்ட கேக்குற....இந்த அண்ணன் கிட்ட தானடா கேக்குற" என்ற நடிகர் வடிவேலு வசனம் தான் நினைவுக்கு வருகிறது.

விடுதலை இராசேந்திரன்
முகநூல் பதிவு 24.02.2026

## கழக ஏட்டுக்கு வளர்ச்சி நிதி

● தமிழ்நாடு அறிவியல் மன்ற நிர்வாகிகளான ஆசிரியர்கள் சிவகாமி, ஆசிரியர் ஈரோடு சிவகுமார் ஆகியோர் முன்னெடுப்பில் பெரியார் முழக்கம் வளர்ச்சிக் குழு உருவாக்கப்பட்டு, பல்வேறு தோழர்கள் மாதம்தோறும் தலா ரூ.500 வழங்கி வருகிறார்கள். ஓராண்டு செயல்திட்டமாக இதை செயல்படுத்தி வருகின்றனர். பிப்ரவரி மாத நன்கொடையாக ரூ.14,000 வழங்கியுள்ளனர். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம் (ஆசிரியர்).


● பிப்-18 கழகத் தலைமை அலுவலகத்தில் கழகத் தோழர் அருண் (இளைஞரணி மாவட்ட அமைப்பாளர்) பிறந்தநாளை முன்னிட்டு கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்களிடம் ரூ.2000 பெரியார் முழக்கம் வளர்ச்சி நிதி அளித்தார். பிறந்தநாள் மகிழ்வாக தோழர்கள் கேக் வெட்டிக் கொண்டாடினர்.

# “நாம் தொப்புள் கொடி உறவுகள்”

## கழக மாநாட்டில் தோழர் நல்லகண்ணுவின் பேச்சு

இந்த நல்ல வாய்ப்பைத் தந்த ‘தந்தை பெரியார் திராவிடர் கழக’த்துக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது பெரியார் ‘குடிஅரசு’ கட்டுரைகளின் இரண்டாவது தொகுதி. ஏற்கனவே 1925 ஆம் ஆண்டுக்கான முதல் தொகுதியை தந்தை பெரியார் திராவிடர் கழகம் 2003-ல் வெளியிட்டிருக்கிறது. தந்தை பெரியாருடைய சிந்தனைகள் மனித சமூகத்துக்கு மிகவும் அடிப்படையானவை. அந்த சிந்தனைகள், தமிழகம் மட்டுமல்ல, உலகம் முழுமைக்கும் மனித சமூகத்துக்கு வழிகாட்டும் சிந்தனைகள். அத்தகைய சிந்தனைகளினால் தந்தை பெரியார் வரலாறு படைத்தார். வரலாறு படைத்தது மட்டுமல்ல, வரலாறாகவே வாழ்ந்தார். எதிர்கால வரலாற்றுக்கும் அவர் வழிகாட்டியாக விளங்குகிறார். அதனால்தான் கட்சி வேறுபாடின்றி, நாம் அனைவரும் தந்தை பெரியாரை வணங்குகிறோம்; பாராட்டுகிறோம்; வழிகாட்டியாக ஏற்றுக் கொள்கிறோம்.

பெரியார் ‘குடிஅரசு’ பத்திரிகை நடத்திய காலங்களில் - அதில் தொடர்ந்து பொதுவுடைமை இயக்கத்தைச் சார்ந்த சிங்காரவேலர், ஜீவா, சாத்தான்குளம் ராகவன் போன்றவர்கள் அதில் தொடர்ந்து எழுதி வந்தார்கள். பகத்சிங் ஆங்கிலத்தில் எழுதிய “நான் ஏன் நாத்திகன் ஆனேன்?” என்ற நூலை - தமிழில் மொழி பெயர்த்து, தோழர் ஜீவா ‘குடிஅரசு’ பத்திரிகையில் எழுதினார். அதற்காக, அன்றைய பிரிட்டிஷ் அரசு, ஜீவாவுக்கு 9 மாத சிறைத் தண்டனை விதித்தது.



பெரியாரும், ‘குடிஅரசு’ வெளியீட்டாளருமான, பெரியாரின் அண்ணன் ஈ.வெ.கிருஷ்ணசாமியும் தண்டிக்கப்பட்டனர். எதற்காக, இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், பெரியார் இயக்கத்துக்கும், பொதுவுடைமை இயக்கத்துக்கும் உள்ள உறவு நீண்டகால உறவு. அது பிரிக்க முடியாத ‘தொப்புள் கொடி உறவு’. அந்த உறவு இன்று வரை நீடிக்கிறது. இது என்றென்றும் நீடிக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனித குலம் வாழ்வதற்கு தன்மானம் அவசியம். அந்தத் தன்மானத்தை உறுதிபடுத்துவதற்கு - மனித உழைப்புக்கு மரியாதையையும், உரிய அங்கீகாரத்தையும் தரக்கூடிய பொதுவுடைமைக் கொள்கை தேவை. எனவே, தன்மானமும்- பொதுவுடைமையும், நமக்கு இரு கண்கள். இந்த இரண்டுமே நமக்கு மூச்சுக் காற்று. நாம் மனிதராவதற்கு மூச்சுக் காற்றான இந்த இரண்டு கொள்கைகளுமே தேவை என்பதை, கம்யூனிஸ்ட் கட்சி அங்கீகரித்துள்ளது. இங்கே, எனக்கு முன் பேசிய தோழர் அதியமான் குறிப்பிட்டதுபோல், இரண்டு இயக்கங்களுக்கும் இடையே கருத்து வேறுபாடுகளும் உண்டு. இல்லை என்று சொல்ல முடியாது. வாழ்க்கைக்கான போராட்டத்தில், அக முரண்பாடுகளையும், புற முரண்பாடுகளையும் சந்திக்க வேண்டியிருக்கிறது. அவைகளைச் சந்திக்கும் அணுகுமுறையில், இயக்கங்களுக்கிடையே மாறுபாடுகள் வருகின்றன. ஆனாலும், மனித குலம் வளர வேண்டும் என்று சிந்திக்கும் இயக்கம், பகுத்தறிவு இயக்கமும் பொதுவுடைமை இயக்கங்களுமே ஆகும்.

**திருப்பூரில் அக். 2 ஆம் தேதி ‘குடி அரசு’ 1926 இரண்டாம் தொகுப்பை வெளியிட்டு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் தோழர் ஆர்.நல்லக்கண்ணு ஆற்றிய உரை. அவரது நினைவாக....**

மனிதன், இந்தப் பூமியில் வாழ்வதைப் பற்றிக் கருதாமல், எங்கேயோ இருக்கும் சொர்க்கத்துக்குப் போய் அங்கே ஒரு நல்ல வாழ்க்கை வாழ்வதற்காக கடவுளை நம்பிக் கொண்டு வாழ வேண்டும் என்று, சொல்லிக் கொண்டிருக்கிற, இயக்கங்கள் அல்ல. காரல்மார்க்ஸ், மதம் ஒரு அபின் என்றார். ஏழை எளிய மக்களுக்கு ஒரு ‘வடிகால்’ என்றாலும், அதுவே மனித குல வளர்ச்சிக்கான இயக்கங்கள் அல்ல. தந்தை பெரியாரும், அதைத்தான் சொன்னார். கடவுள், மதம், முட்டாள்களின் கண்டுபிடிப்பு என்றார். இந்தக் கடவுள், மத எதிர்ப்பு விஷயத்தில் பொதுவுடைமை இயக்கத்துக்கு சில வேறுபாடுகள் உண்டே தவிர, இரண்டு இயக்கங்களுமே, மனித குல முன்னேற்றத்துக்காகவே செயல்படுகின்றன. எனவே இந்த இரண்டு இயக்கங்களின் செயல்பாடுகளுமே அவசியமாகும். அந்த அடிப்படையில் தான், பெரியார் இயக்கங்களை நாங்கள் தொடர்ந்து ஆதரித்து வருகிறோம்; உதவிடுகிறோம்; நெருக்கடி வரும் நேரங்களில் துணை நிற்கிறோம்.

பெரியார் காலத்தில, சிங்காரவேலு, ஜீவா போன்றவர்கள் பெரியாரிடமிருந்து மாறுபட்டது உண்டு. ஆனால், எந்தக் காலத்திலும், பகைமை பாராட்டியதில்லை. பெரியாரே சொல்லியிருக்கிறார், என்னை விட்டுப் பிரிந்து சென்றவர்களில், பிரிந்து சென்ற பிறகும் என்னைப் பற்றிக் குறை கூறிப் பேசாதவர்களில் ஜீவாவும் ஒருவர் என்று. ஜீவாவைப் போலவே, நாங்களும் தந்தை பெரியார் மீது அத்தகைய தனி மரியாதையை வைத்திருக்கிறோம்.

எங்கள் இயக்கத்தில் இருந்த ‘ஏ.எஸ்.கே. அய்யங்கார்’ தந்தை பெரியாரோடு மிகவும் நெருக்கமாக இருந்தவர். பெரியார் மீது மிகுந்த மரியாதை கொண்டவர். அவர் தனது பெயருக்குப் பின்னால் இருந்த ‘அய்யங்கார்’ என்ற பெயரை சட்டப் பூர்வமாக நீக்கி, அரசுப் பதிவிதழில் (கெசட்) வெளியிட்டார். அப்போது, பெரியார் அவரை அழைத்து, “அய்யங்கார், உங்கள் பெயரில் அய்யங்கார் இருந்ததால் தான், அய்யங்காரே பெரியாரை ஆதரிக்கிறார் என்று மற்றவர்கள் கருதுவார்கள், சிந்திப்பார்கள். வெறும் ‘ஏ.எஸ்.கே.’ பெரியாரை ஆதரிக்கிறார் என்றால், மற்றவர்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தாது. எனவே ‘அய்யங்கார்’ என்பதை எடுக்காதீர்கள்” என்றார்.

அந்த அளவுக்கு இருவரும் நெருக்கமாக இருந்தார்கள். பெரியாரைப் பற்றி அவர் ஒரு நூலே எழுதியிருக்கிறார். அதே போல் தோழர் பாலதண்டாயுதம் அவர்கள் மறைவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால், பெரியாரைப் பற்றி “ஜாதியை ஒழித்த ஜாம்பவான்” என்று எழுதினார். எங்கள் கட்சியைச் சார்ந்த ‘நாடாளுமன்றத்தின் நாவலர்’ என்று அழைக்கப்பட்ட மூத்தத் தலைவர் ஹிரேன் முகர்ஜி, பெரியாரைப் பற்றிக் கூறும் போது, “அவர் ஒரு ‘ஒரிஜினல்’ சிந்தனையாளர்; அசலான சிந்தனைக்காரர். அவர் சிந்தனைகளை கடன் வாங்குவது கிடையாது.

அவர் சொன்னார், இவர் சொன்னார் என்று மேற்கோள் காட்டுவது அவரது வழக்கமல்ல. எங்களது வங்காளத்தில், நாங்கள் எத்தனையோ புரட்சிகர நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும், பார்ப்பனர்களின் வைதீகத்தில் கை வைக்க முடியாது. ஆனால் பெரியார் பார்ப்பன வைதீகத்தை ஒழிக்கும் புரட்சிகர திருமண முறையை தமிழ் நாட்டில் அமுல்படுத்தியிருப்பது மிகப் பெரும் புரட்சி. எங்கள் மாநிலத்தில்கூட, இதைச் செய்ய முடியாது” என்று பெருமையுடன் கூறுவார். பெரியார் கொள்கைகளுக்கு, இன்றும் அவசியமும், தேவையும் இருக்கிறது என்றே நாங்கள் கருதுகிறோம்.

எங்கள் கட்சியில் பொதுச் செயலாளராகவும், நாடாளுமன்றக் குழுத் தலைவருமாக இருந்தவர் இந்திரஜித் குப்தா. மத்திய உள்துறை அமைச்சராகவும் இருந்தார். அவர் உள்துறை அமைச்சராக இருந்தபோதே, ஒரு கருத்தைக் கூறினார். இந்தியாவில் அரசியல் சட்டத்தின், ஆட்சிதான் சட்டப்படி நடக்கிறது என்றாலும், நடைமுறையில் ‘மனுதர்மம்’ வர்ணாஸ்ரமத்தின் ஆட்சிதான் நடக்கிறது. இதை எதிர்த்து, நீண்ட போராட்டத்தை நடத்த வேண்டும், என்றார்.

காரல் மார்க்ஸ் - உலகத் தொழிலாளர்களுக்கு அறைகூவல் விடுத்தார். ஆனால் உலகத் தொழிலாளிகளுக்கும் இந்தியத் தொழிலாளிகளுக்கும் வேறுபாடு உண்டு. இந்தியத் தொழிலாளி மீது பிறப்பின் அடிப்படையில் ‘வர்ணாஸ்ரம தர்மம்’ என்ற வேறுபாடும் திணிக்கப்பட்டிருக்கிறது. இந்த அநீதிகளை ‘ராஜதர்மம்’ என்கிறார்கள்.

1925-ம் ஆண்டு வரலாற்றில் ஒரு முக்கியமான ஆண்டு. பெரியாரின் சுயமரியாதை இயக்கம் உருவான காலம். இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சி துவக்கப்பட்டதும் 1925-ல் தான். இந்தக் கொள்கைகளுக்கு எல்லாம் நேர் விரோதமான வர்ணாஸ்ரமத்தை ஆதரிக்கும் ஆர்.எஸ்.எஸ்., துவக்கப்பட்டதும் அதே ஆண்டில் தான். 1924-ல் தான் தீண்டாமைக்கு எதிரான வைக்கம் போராட்டம் பெரியார் தலைமையில் நடந்தது.

காங்கிரஸ் கட்சிப் பணத்தில் நடந்த சேரன்மாதேவி குருகுலத்தில் நடந்த ‘வர்ணாஸ்ரமத்துக்கு’ எதிராக, பெரியார் போர்க்கொடி உயர்த்தியதும் அப்போது தான். பெரியார் சாதி, மத, கடவுள் நம்பிக்கைகளுக்கு எதிராகப் போராடினார். பெண்ணடிமைக்கு எதிராகப் போராடினார். தமிழில் எழுத்துச் சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்தினார்.

1944-ம் ஆண்டிலேயே ‘இனி வரும் உலகம்’ என்று அவர் எழுதிய நூலை நான் படித்தேன். சோதனைக் குழாய்கள் மூலம் - ஆண் பெண் உறவு இன்றியே குழந்தை பிறக்கும் காலம் வரும் என்றார். இப்போது இருக்கும் ‘செல்’ போன்கள் பற்றி அப்போதே சிந்தித்திருக்கிறார். விஞ்ஞானச் சிந்தனைகள் பரவ வேண்டும்; அதற்கு மூடநம்பிக்கைகள் மறைய வேண்டும் என்று பெரியார் விரும்பினார்.

கொடிய மனித உரிமைகளுக்கு எதிரான தன்மானத்தை மறுக்கக் கூடிய சமத்துவத்துக்கு எதிரான கருத்துக்களைப் பரப்ப புதிய உருவங்கள் எடுத்து வரும் சூழ்ச்சிகளை உடைத்து எறிவதில், நமது இரு இயக்கங்களும் ஒன்றுபட்டுப் போராட வேண்டும்.

ஜெயமோகன் என்ற எழுத்தாளர் ‘தினமணி’யில் அம்பேத்கர் - ஒரு “பார்ப்பனப்” பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். பெரியார், மணியம்மையைப் பொருந்தாத வயதில் திருமணம் செய்து கொண்டார் என்று கொச்சைப்படுத்தி எழுதினார். இதைக் கண்டித்து நான் ‘தினமணி’யில் எழுதினேன். பெரியார் மறைந்தவுடன், நானும் திரு.கல்யாணசுந்தரம் அவர்களும், மணியம்மையாரை சந்திக்கச் சென்றோம். அப்போது அவர், “இன்னும் 4 ஆண்டுகள் பெரியார் உயிருடன் இருந்திருந்தால், நூறு வயது வரை வாழ்ந்திருப்பார். அவரை 100 ஆண்டுகள் வரை வாழ வைத்தேன் என்ற பெருமை எனக்குக் கிடைத்திருக்கும்” என்று கூறினார். அத்தகைய பெருந்தன்மையான சிந்தனை ஜெயமோகனுக்கு இல்லை. அவரது புத்தி சின்னபுத்தியாகவே இருக்கிறது.

பெரியார் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத்தான் பாடுபட்டார். தலித் மக்களுக்காகப் பாடுபடவில்லை என்று சிலர் பேசுகிறார்கள். இது தவறு. அவர் தேங்கிப் போய்க் கிடந்த சமூகத்தை உடைத்தவர்; அணையைத் தகர்த்து தண்ணீரைப் பாய்ச்சியவர்; ஒரு முறை வல்லம் கல்லூரிக்கு நானும் மூப்பனாரும் சென்ற போது, “பெரியார் மட்டும் இல்லாவிட்டால் நீங்களும் நானும் அருவாள், கம்பைத் தூக்கிக் கொண்டுதான் திரிந்திருப்போம்” என்று மூப்பனார் என்னிடம் கூறினார். நான் சிந்தித்தபோது அதுதான் உண்மை என்று எனக்குப் புரிந்தது. அந்த அளவுக்கு நம்மை சிந்திக்க வைத்தவர் பெரியார். நமது முந்தைய தலைமுறையைச் சேர்ந்த பெரியாரும், சிங்கார வேலரும் நல்ல கருத்துகளை நமக்கு விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

நாம் அவைகளைப் பேசுவது மட்டும் போதாது, செயல்படுத்த வேண்டும். இன்று தலித் மக்கள் மீது தாக்குதல் நடத்துகிறவர்கள், பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்கள் தான். இந்த நிலையில் நாம் தலித் மக்கள் பக்கம் அவர்களுக்கு பாதுகாப்பாக நிற்க வேண்டும். இன்றைக்குத் தேவை, தத்துவங்களோ, விளக்க உரைகளோ அல்ல. செயலாற்றல்தான் தேவை. செயல்பட வேண்டிய காலத்தில் நாம் வாழ்கிறோம். நமக்கிடையே உள்ள சிறுசிறு வேறுபாடுகளை ஒதுக்கிவிட்டு, நாம் இணைந்து செயல்படுவோம்; போராடுவோம்!

கழகத் தலைவர் எழுதி வரும் பெரியார் மீதான ஜீவாவின் விமர்சனங்களுக்கு பதிலடி அடுத்த இதழில் வெளிவரும்

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

# சென்னையில் மகிழ்ச்சி விழா!

## ஜாதி மறுப்பு மணம் புரிந்த பெரியார் குடும்பங்கள் சந்திப்பு

சென்னை மாவட்டக் கழகம் மற்றும் இளைஞர் அணி இணைந்து நடத்திய காதலர் தினத்தை முன்னிட்டு ஜாதி மறுப்பு இணையர்களின் குடும்ப விழா பிப்ரவரி 17 அன்று மாலை 6 மணி அளவில் ராயப்பேட்டை நல்வாழ்வு மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வை சென்னை மாவட்டச் செயலாளர் உமாபதி ஒருங்கிணைத்தார்.

கவுசல்யா (நிறுவனர் சங்கர் அறக்கட்டளை) உடுமலை சங்கர் ஜாதியப் படுகொலையைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் ஜாதி ஆணவ கொலைக்கு எதிராக தொடர்ந்து குரல் கொடுப்பவர். தன்னுடைய குடும்ப உறுப்பினர்களின் ஜாதி வெறி செயலுக்கு எதிராக சட்டப் போராட்டம் நடத்தி வருபவர். காவை.ஈசுவரன் (தலைமைக் குழு உறுப்பினர்), ஜாதி மறுப்பு திருமணங்களை முன்னின்று கடும் எதிர்ப்புகளை மீறி நடத்தி அவர்களுக்கு அடைக்கலம் தருபவர். சேலத்தில் 1000 கணக்கான ஜாதி,மத மறுப்பு திருமணங்களை நடத்தியவர்.



தீனா (பெரியார் சிந்தனையாளர் இயக்கம்) புதுவை இயக்கத்தில் பெண்களை துணிச்சலோடு ஜாதி மறுப்பு திருமணங்களை புரிய ஊக்குவிப்பவர். தன்னுடைய இயக்கப் பெண்களில் சிலர் ஜாதி மறுப்பு திருமணங்களை நடத்தி வைத்தவர். வழக்கறிஞர்.திருமூர்த்தி (சென்னை உயர்நீதிமன்றம்) ஜாதி மறுப்பு திருமணங்களை நடத்தி வைத்து அவர்களுக்கு சட்டப் பாதுகாப்பு வழங்குபவர்.

உமாபதி (சென்னை மாவட்டச் செயலாளர்) 500-க்கும் ஜாதி மறுப்பு திருமணங்களை நடத்தி வைத்தவர். அதில் வரும் நெருக்கடிகளை சமாளித்து இரு வீட்டினரையும் இணைக்கும் பணியை செய்பவர். ஜாதி மறுப்பு திருமணம் செய்து கொண்டவர். வழக்கறிஞர். ரமேசு பெரியார் (ஜாதி மறுப்பு சங்கம்) தமிழ்நாட்டில் அனைத்து திருமணப் பதிவு அலுவலங்களில் ஜாதி மறுப்புத் திருமணத்தில் உள்ள நடைமுறை சிக்கல்களை தகர்த்தவர். இலவசமாக ஜாதி மறுப்புத் திருமணங்களை நடத்தி வைப்பவர். ஜாதி மறுப்பு திருமணங்களை சட்ட முறைப்படி பதிவு செய்து அவர்களுக்கு அரசு சலுகைகளை வாங்கி தருபவர். இவர்களை பாராட்டி விருதினை கழகத் தலைவர் கொளத்தூர் மணி மற்றும் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் வழங்கினர்.

கழகத்தில் ஜாதி மறுப்பு திருமணங்களை புரிந்த தோழர்களை பாராட்டி 60-க்கும் மேற்பட்ட இணையர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. சென்னை, சேலம், கோவை, திருப்பூர், புதுவை, வேலூர் என பல்வேறு பகுதிகளில் இருந்து ஜாதி மறுப்பு இணையர்கள் குடும்பத்துடன் கூடியிருந்தனர்.

தம்மம் கலைக் குழுவின் குதுகலமான இசை நிகழ்ச்சி நடைபெற்றது. இணையர்கள் குடும்பத்துடன் ஆடி, பாடி மகிழ்ந்தனர். கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் பேசுகையில் "காதலர் தினத்தை ஜாதி மறுப்பு நாளாக மாற்ற வேண்டும் என்ற அடிப்படையில் இந்த விழாவை நாங்கள் முன்னெடுத்தோம். தொடர்ச்சியாக ஜாதி மறுப்பு திருமணங்களை கொள்கையாகவே ஏற்று செய்து கொள்ள வேண்டும் என்று கழகத் தோழர்கள் பற்றுருதியுடன் இதை செய்து வருகிறார்கள். ஆகவே இணையர்கள் மனம் திறந்து மகிழ்வுடன் கொண்டாடுவதற்காக தான் இந்த நிகழ்வை நாங்கள் நடத்துகிறோம். உங்கள் முகமூடிகளை கழற்றி விட்டு மகிழ்ச்சியாக கொண்டாடுங்கள் என்றார்.

ஜாதி மறுப்பு இணையர்கள் பெரியாரியலை வாழ்க்கை நெறியாக்கும் போதுதான் அந்த வாழ்க்கை வெற்றிகரமாகிறது. மதம், கடவுள் நம்பிக்கைகளோடு ஆணாதிக்கம் நிறைந்த பல ஜாதி திருமணங்கள் விவாகரத்துகளில் முடிவதற்கு காரணம். இந்தக் கொள்கைப் புரிதல் இல்லாமை தான் ஒழ்வொரு ஆணும் தனது ஆணாதிக்க சிந்தனையை மறுப்பதற்கு உந்துதல் தருவது பெரியாரியம் தான்" என்று மேலும் கூறினார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேசுகையில் ஜாதி மறுப்பு திருமணம் செய்த இணையர்கள் அவர்களின் சொந்த ஜாதியை தவிர்த்து மற்ற ஜாதியில் தனது குழந்தைகள் செய்ய ஊக்குவிக்க வேண்டும் என்ற கோரிக்கை வைத்து சிறப்புரையாற்றினார். தோழர்கள் நவெந்தன், சஞ்சய், மனோஜ்குமார் ஆகியோர் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். சென்னை, சேலம், கடலூர், வேலூர், திருப்பூர், கோவை உள்ளிட்ட பல பகுதிகளில் இருந்து 300-க்கும் மேற்பட்ட கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

### 'தொடரட்டும் தமிழ்நாட்டில் திமுக சாதனைகள்'

## தேர்தல் பரப்புரை: திருப்பூர், சென்னை,சேலம் கழகத் தோழர்கள் தீவிரம்



**திருப்பூர்:** 15-02-2026 அன்று கழக தலைவர், கொளத்தூர் மணி மற்றும் பொதுச் செயலாளர், தோழர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் தலைமையில் மேட்டூரில் நடந்த தலைமைக் குழு கூட்டத்தில், விவாதிக்கப்பட்டு எடுக்கப்பட்ட முடிவுகளை நடை முறைப்படுத்துவது குறித்த மாவட்ட ஆலோசனைக் கூட்டம் 19-02-2026 வியாழன் மாலை 4 மணியளவில் வீரபாண்டி பிரிவு பெரியார் படிப்பகத்தில் கழகப் பொருளாளர் சு.துரைசாமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்திற்கு மாவட்ட, மாநகர, ஒன்றிய நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தனர் அதன் அடிப்பைடையில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

●2026 சட்டமன்ற தேர்தலை ஒட்டி மாநகர , நகர, ஒன்றியப் பகுதிகளில் "தொடரட்டும் தமிழ்நாட்டின் சாதனைகள்! திமுக அரசை உறுதி செய்வோம்!" என்ற தலைப்பில் மாவட்டம் முழுவதும் முதல் கட்டமாக 50 இடங்களில் பரப்பரை செய்வது

●கழக வார ஏடான புரட்சிப் பெரியார் முழக்க சந்தாவை இந்த மாத இறுதிக்குள் தலைமைக்கு அனுப்பி வைப்பது என முடிவு செய்யப்பட்டது.

**சென்னை:** மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம் பிப்-22,2026 மாலை 6 மணிக்கு கழகத் தலைமை அலுவலகம் மயிலாப்பூரில் நடைபெற்றது. இரா.உமாபதி (சென்னை மாவட்டச் செயலாளர்) நிகழ்வை ஒருங்கிணைத்தார். கழகத் தலைமைக் குழுவில் தேர்தல் களத்தில் திமுக ஆட்சிக்கு களம் இறங்கி செயல்படுவது குறித்து "தொடரட்டும் தமிழ்நாட்டில் சாதனைகள்! திமுக ஆட்சியை உறுதி செய்வோம்! என்றத் தலைப்பில் தேர்தல் பரப்புரை கூட்டங்களை நடத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது.தபசி குமரன் (தலைமை நிலையச் செயலாளர்) சென்னை மாவட்டக் கழகத்தின் செயல்பாடுகளை பாராட்டினார்.





சென்னை புத்தகக் காட்சியில் நிமிர்வோம் பதிப்பகம் சிறப்பாக நடைபெற கடுமையாக உழைத்த எட்வின் பிரபாகரன் அவர்களைப் பாராட்டி சால்வை அணிவித்தார். அன்பு தனசேகர் ( தலைமைக் குழு உறுப்பினர்), ம.கி எட்வின் பிரபாகரன் (மாவட்ட அமைப்பாளர்), ப.அருண் ( மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்) அருண் கோமதி (தாம்பரம் பகுதி அமைப்பாளர்) தோழர்கள் வடசென்னை தினகரன், தேன்மொழி (IT WING) புருஷோத்தமன், இரண்யா, ராஜேஷ், சூர்யா ஆகியோர் கருத்துக்கள் தெரிவித்தனர்.

நிறைவாக கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஏன் ஆதரிக்க வேண்டிய தேவை தற்போதைக்கு உருவாகி உள்ளது என்பதைப் பற்றியும், சமூக வலைதளங்களிலும் இந்த தேர்தல் பிரச்சாரத்தை மேற்கொள்வது பற்றியும், இந்தப் பரப்புரையில் தோழர்கள் எப்படி உரையாற்ற வேண்டும் என்றும், திமுக சாதனைகளை மட்டும் சொல்லாமல் அதை உணர்ச்சிகளுடன் மக்கள் மன்றத்தில் கடத்துவது குறித்தும் நிறைவுரையாற்றினார். கோபிநாத் (திருவல்லிக்கேணி பகுதித் தலைவர்), ராஜேஷ் (செயலாளர்) இணைந்து திருவல்லிக்கேணி பகுதி சார்பாக நடைபெற இருக்கும் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களை நடத்த முதற்கட்டமாக ரூ.2000 சென்னை மாவட்டக் கழகத்துக்கு உமாபதி அவர்களிடம் வழங்கினார்கள். அம்பத்தூர் பகுதி அமைப்பாளராக தோழர் சதிஸ் கண்ணன் நியமிக்கப்பட்டார். தென்சென்னை நிமிர்வோம் வாசகர் வட்ட அமைப்பாளராக தோழர் இம்மானுவேல் துரை நியமிக்கப்பட்டார். இருவருக்கும் கழகப் பொதுச்செயலாளர் எழுதிய "திராவிட பெரியார் யாருக்கு எதிரி" நூலை வழங்கினார்.

**இறந்த பிற கழகத் தோழர்கள் புருஷோத்தமன், வடசென்னை தினகரன், இராஜன் ஆகியோர் இறந்த பிறகு எவ்வித சடங்குகள் இல்லாமல் மருத்துவ பயன்பாட்டிற்கு தங்களது உடல்கள் பயன்பட வேண்டும் என்று சட்ட முறைப்படி உடற்கொடை செய்துள்ளதற்குப் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.** நிறைவாக அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்பட்டது. இரவு உணவுக்கான செலவுகளை தோழர் சைதை அன்பரசு வழங்கினார். தட்சணாமூர்த்தி (வடசென்னை அமைப்பாளர்), வேலு (வடசென்னை துணைத் தலைவர்), த.நா சூர்யா (திருவல்லிக்கேணி பகுதி அமைப்பாளர்), செய்தியாளர் பிரசாந்த், என 50-க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

**சேலம்:** சேலம் கிழக்கு, மேற்கு மாவட்டப் பொறுப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் 23.02.2026 திங்கள் காலை 10.00 மணியளவில் சேலம் கிழக்கு மாவட்டத் தலைவர் சக்திவேல் தலைமையில் அவரது இல்லத்தில் நடைபெற்றது. சூரியகுமார் (சேலம் மேற்கு மாவட்டத் தலைவர்) முன்னிலை வகித்தார். மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர பொறுப்பாளர்கள் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தனர். அதன் அடிப்பைடையில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

15.02.2026 அன்று நடைபெற்ற தலைமைக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவின் படி, வருகிற 2026 சட்டமன்ற தேர்தல் களத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசை ஆதரித்து "தொடரட்டும் தமிழ்நாட்டின் சாதனைகள்!திமுக அரசை உறுதி செய்வோம்!" என்ற தலைப்பில் சேலம் மாவட்டம் முழுவதும் 200 இடங்களில் பரப்பரை செய்வது என தீர்மானிக்கப்பட்டது.



● 2026 ஆம் ஆண்டிற்கான புரட்சிப் ரியார் முழக்க சந்தா சேலம் மாவட்டக் கழகத்தின் சார்பில் முதல் தவணையாக 500 சந்தாவினை தலைமைக் கழகத்திடம் ஒப்படைப்பதென தீர்மானிக்கப்பட்டது.

● சமூக வலைதளங்களின் வழியாக கழகத்தின் பரப்புரைகளை அதிகளவில் மக்களிடையே கொண்டு சேர்ப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

● மாமாங்கம் டால்மியா போர்டில் ஜவுளி பூங்கா என அறிவித்து சாயப்பட்டறைகள் அமைக்கப்பட உள்ளது. இதனால் மாமாங்கம் சுற்று வட்டாரப் பகுதிகளில் விவசாய பாதிப்பு, குடிநீர் பாதிப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதிக்கும் நிலை ஏற்படக்கூடிய சூழல் ஏற்பட்டிருக்கிறது. எனவே அதை எதிர்த்து விவசாயிகளுக்கு ஆதராக கழகம் செயல்படும் எனவும் தீர்மானிக்கப்படுகிறது.

சேலம் மாநகரச் செயலாளர் ஆனந்தி நன்றி கூற கலந்துரையாடல் கூட்டம் நிறைவு பெற்றது. சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் டேவிட், சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் கோவிந்தராஜ், சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன், இளம்பிள்ளை நகரத் தலைவர் ரமேஷ், சேலம் மாநகர அமைப்பாளர் தேவராஜ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தங்கதுரை, மாவட்ட இளைஞர் அணித் தலைவர் தேவ பிரகாஷ், மாவட்ட இளைஞர் அணிச் செயலாளர் பிரபாகரன், நங்கவள்ளி நகரச் செயலாளர் சந்திரசேகரன், வனவாசி நகரச் செயலாளர் உமாசங்கர், சிந்தாமணியூர் நகரத் தலைவர் ஜெயபிரகாஷ் ,சிந்தாமணியூர் நகரச் செயலாளர் ரவி, சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சிவ சண்முகம், ஆத்தூர் நகரச் செயலாளர் கணபதி, தமிழ்நாடு மாணவர் கழக சேலம் மாவட்ட அமைப்பாளர் நாகராஜ், சேலம் வெங்கடேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted :february 28, 2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor :K. Rajendran